பத்திரிக்கை செய்தி

வணிக பயன்பாட்டிற்கு புதிய மின் இணைப்பு வழங்க ரூ.15,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய வணிக ஆய்வாளர் கைது

புகார்தாரர் திரு.தினேஷ் குமார், மணப்பாக்கம், சென்னை மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தன்னுடைய சொந்த இடத்தில் வணிக பயன்பாட்டிற்காக புதிதாக 6 கடைகள் கட்டியுள்ளார். இக்கடைகளுக்கு புதிய வணிக ரீதியிலான மின் இணைப்பு வேண்டி மணப்பாக்கம் மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழக அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணபத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.அண்ணாமலை, வணிக ஆய்வாளர், மணப்பாக்கம், சென்னை மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.15,000/- (ஒவ்வொரு மின் இணைப்புக்கும் தலா ரூ.2,500/- வீதம்) லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 01.07.2025, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.அண்ணாமலை, வணிக ஆய்வாளர், லஞ்ச பணம் ரூ.15,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.